இரண்டாவது
தடத்தில்
குரல்

அஸ்கர் பாறும் தமிழர் ஒன்றியத்தின் மாதாந்த ஏடு

ஒன்றியத்தின் குரல்

வைகாசி 2006 ஓசை 1

# புத்துணர்வுடன் புதிய நிர்வாகம்!

கடந்த வருடம் ஆரம்பத்தில் எதிர்பாராத வகையில் ஒன்றியம் சில இடையூறுகளைச் சந்தித்தது யாவரும் அறிந்ததே. இவ் இடையூறுகளை வெகு நிதானத்துடன் எதிர்வு கொண்டு சவால்களை வென்றதுமட்டுமின்றி பல வகையான ஆக்கபூர்வமான முயற்சிகளையும் முன்னெடுத்தது. இவ்விடயத்தில் கடந்த நிர்வாகத்திற்கும் ஒத்துழைத்த அங்கத்தவர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பாடுடையவர்களாகின்றோம்..

கடந்த வருடத்தை கல்வியாண்டாகப் பிரகடனப்படுத்தியமையும் கல்வி சம்பந்தமான செயற்பாடுகளிற்கு முக்கியத்துவமளித்து செயற்படுத்தியமையும் சில ஆக்கபூர்வமான செயற்பாடுகளிற்கு வித்திட்டமையும் மறக்கவோ மறுக்கவோ முடியாத உண்மைகள்..
தொடக்கி வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் சிறப்பாகவும் தொடர்ச்சி பெறவும் வேண்டிய நிலையில்.....

2006 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.நிர்வாக உறுப்பினர்களனைவருமே போட்டிகளின்றி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.எவ்வளவு பெரிய விடயம் இது.இது ஒன்றே போதுமே நாம் புத்துணர்வு கொள்ளவும் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கவும்.இத்தகைய உந்து சக்தியுள்ள அங்கத்தவர்களிருக்கும் வரை எம்முன் சவால்களாக எழும் சிறு இடையூறுகளனைத்தும் தவிடு பொடியாவது நிட்சயம்.

## புதிய நிர்வாக சபை

தலைவர்: ஜேம்ஸ் ஜெயசீலராஜா
உபதலைவர்: சுதாகரன்
செயலாளர்: தங்கவேல்
உபசெயலாளர்: தமிழினி
பொருளாளர்: தனபாலன்
கலைச்செயலாளர்:தர்சினி
உப கலைச்செயலர்: கௌரி
கல்வித்துறைச்செயலர்: ரோகான்
விளையாட்டுத்துறைச்செயலர்: சதீஸ்
நிர்வாகசபை உறுப்பினர்:தயாளன்
நிர்வாகசபை உறுப்பினர்:சாந்தி
நிர்வாகசபை உறுப்பினர்:ரவீந்திரநாத்

## பதவி விலகல்

மேற் குறிப்பிடப்பட்ட தலைவர் பதவியிலிருந்து உதயகுமார் அவர்கள் தானகவே விலகியதையிட்டு 26.03.06 நடைபெற்ற அவசர பொதுக்கூட்டத்தில் புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு நிர்வாகம் அறிவித்தல் விடுத்தது. உப தலைவர் சுதாகரின் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய தலைவராக ஜேம்ஸ் ஜெயசீலராஜா தெரிவு செய்யப்பட்டு,புதிய நிறைவேற்றப்பட்ட யாப்பு விதிக்கமைய கல்வித்துறைச்செயலர் உட்பட 13 பேர் கொண்ட நிர்வாக சபை அமைக்கப்பட்டுள்ளது.

# கோலாகலபுத்தாண்டுவிழா



கடந்த 28.04.06 இல் Bryn menighets hus இல் புத்தாண்டு விழா இயல் இசை நாடகத்துடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.குறுகிய கால இடைவெளியில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவானது எதிர்பார்த்ததைவிடவும் நிறைவாக பல்வகை நிகழ்சியையும் உள்ளடக்கியதாகவும் மகிழ்ச்சியளிக்கும் வண்ணமும் அமைந்ததானது



எமக்குக் கிடைத்த வெற்றியாகும்.குறிப்பாக இளைய தலைமுறையினரின் நிகழ்ச்சிகள் மெச்சக்கூடிய விதத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் பயிலப்பட்டு நிகழ்த்தப்பட்டதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது. இவ் வெற்றிக்குத் துணைபுரிந்த அனைவருக்கும் நிர்வாகம் நன்றி கூறக் கடமைப்படுகின்றது. விழா அமைப்பாளர்களின் இவ்வெற்றிக்குக் காரணம் அமைப்பாளர்களும் துணை நின்றவர்களும் தத்தமது கடமைகளை அனுபவ முதிர்ச்சியுடன் நேர்த்தியாகவும் பொறுப்புணர்வுடனும் செயலாற்றியதேயாகும்.இவ்வகையான பொறுப்புணர்வுகளுள்ள செயல்திறன் கொண்ட அங்கத்தவர்களின் எதிர்கால வெற்றிகளுக்கு உதாரணமாகவே இவ்விழா கட்டியம் கூறி நிற்கின்றது.

## மீண்டும் ஒன்றியத்தின் குரல்

நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த ஒன்றியத்தின் குரல் மீண்டும் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. நிர்வாகத்திற்கும் அங்கத்தவர்களுக்குமான தொடர்பாடலுக்கு முக்கிய பாத்திரம் வகிக்கும் வண்ணம் உருவகம் பெற்ற குரல் கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டு புதிய ஒழுங்கில் சீரமைப்புக்குள்ளாகி உங்கள் ஆதரவுடன் தொடர்ந்து வெளிவர இருக்கின்றது.

புதிய பகுதியாக சிறுவர்களுக்கான பாலர் திடல் உருவாக்கப்பட்டு வெளிவருகின்றது.இதற்கான முன்னெடுப்புகள் உருவாக்கப்பட்டு ஒழுங்கமைப்புக்கும் பங்களிப்புக்கும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.தற்போதய பங்காளிகள்:

சாந்தி ஜேம்ஸ்: தகவல் சேகரிப்பு
யோகமனோகரி குலராஜ்: தகவல் சேகரிப்பு
கலைவாணி தனபாலன்: வடிவமைப்பு
சற்குணராணி நாகராஜா: எழுத்தமைப்பு
றோகான் திவ்யானந்தன்: அச்சு,விநியோகம்
தங்கவேல் கணபதிப்பிள்ளை: தொடர்பாளர்

## செய்திகள்

தை 20 இல் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.தொடர்ந்து மாசி 18 இல் தலைவர் தனது பதவியிலிருந்து விலகியதையடுத்து உபதலைவரால் பங்குனி 28 வரை நிர்வாகம் நடாத்தப்பட்டது.பங்குனி 28 இல் அவசர பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு புதிய தலைவராக திரு ஜேம்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.அன்றே திருத்தியமைக்கப்பட்ட யாப்பும் நிறைவேற்றப்பட்டது.புத்தாண்டு விழா சித்திரை 22 இல் கொண்டாடப்பட்டது.அதிபரின் இராஜினாமாவைத் தொடர்ந்து தற்காலிக அதிபராக உதவி அதிபராகக் கடமை புரிந்த திருமதி கலைவாணி தனபாலன் அவர்கள் நியமிக்கப்பட்டார்.புதிய யாப்பு விதிகளுக்கமைய கல்வித்துறை சீரமைக்கப்பட்டு தற்காலிகத் துறைச்செயலராக திரு றோகான் நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒற்றுமைக்கு உதாரணம் ஒன்றியமாகட்டும்!

# ஒரு கருத்துக்களின் தொகுப்பு......

ஒன்றியத்தின் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுத் துறையில் அண்மையில் ஒரே விடயம் தொடர்பாக வெவ்வேறான பார்வைகளைக் காணக் கூடியதாக இருந்தது. விடயம் சிறுவர்களின் உதைபந்தாட்டம் சம்பந்தப்பட்டது. இச்சிறுவர்களின் இதுவரைகால வள்ர்ச்சியில் எமது சிறுவர்கள் வெற்றிக் கிண்ணத்தை எட்டக்கூடியவர்கள் என்ற கருத்தும் இவ்வாறு இதற்காக திறமை வாய்ந்தவர்களைத் தெரிவு செய்யும்போது எஞ்சுபவர்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் தடைப்படும் என்ற கருத்தும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டன. மேலோட்டமாகப் பார்த்தால் இரு கருத்துக்களுமே சரியானவை.இது சம்பந்தமாக அமைப்பானது முடிவுக்கு வருவதாயின் இரண்டில் ஒன்றை முடிவாகக் கொண்டால் மற்றைய கருத்துடையவர்கள் அதிருப்தியடைவர்.இது வழமையும் இயல்பும் ஆகும்.இதனால் இதை ஆழமாகப் பார்க்க வேண்டிய தேவை எம்முன் எழுகின்றது. ஒன்றியத்தின் அடிப்படை நோக்கங்களையும் இது பாதிக்கின்றதா என்ற நோக்கு அவசியமாகின்றது. முக்கிய நோக்கங்களான ஐக்கியம்.புரிந்துணர்வுகளுக்கு இடையூறானதா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியதாகின்றது.இதனடிப்படையில் இம்முரண்பாட்டை ஜனநாயக வழியில் கையாள்வதாயின் விளையாடும் விளையாட்டு வீரர்களின் பெற்றோர்களின மத்தியில் மாத்திரம் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு முடிவு எடுப்பதே சிறந்த வழியாகும்.இது உபவிதியாக விளையாட்டுத் துறையில் கையாளப்படலாம்.

## புதிய சாதனையில் விளையாட்டுத்துறை

இவ்வருடம் எமது கரப்பந்தாட்டக் கழகம் முறையேமூன்றாம் இடம்,முதலாம் இடம், மூன்றாம் இடம் என வெற்றிக் கிண்ணங்களை தொடர்ந்து நடைபெற்ற போட்டிகளில் வென்று ஒரு சாதனையைப் படைத்துள்ளது.இச் சாதனையின் மூலவர்களான விளையாட்டு வீரர்களதும் பயிற்றுனர்களதும் பொறுப்பாளர்களதும் உழைப்பும் ஊக்கமும் ஒன்றியத்தினால் கௌரவிக்கப்பட வேண்டியவை.ஏற்கனவே இரு தடவைகள் எமது கழகம் சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றிக்கிண்ணங்களை ஈட்டியமை குறிப்பிடத்தக்கது.



## விளையாட்டுத்துறை அறிவித்தல்

வைகாசி 13அன்று ஸ்ரோவ்ணர் தமிழ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் பதினொரு வயதுப்பிரிவில் எமது கழகமும் கலந்து கொள்கின்றது. ஆனி 3,4 திகதிகளில் எவரெஸ்ட் கழகம் நடாத்தும் கரப் பந்தாட்டப்போட்டியிலும் சிறுவர்களிற்கான உதைபந்தாட்டப் போட்டியிலும்
10,12 வயதுப்பிரிவுகளில் பங்குபற்றுகின்றது.
தொடர்புகட்கு:
சதீஸ்: 93058038

ஒற்றுமைக்கு உதாரணம் ஒன்றியமாகட்டும்!

# வேலைத்திட்டங்கள்

## WWW.ABTF.NO

## ASKER & BÆRUM TAMILSKE FORENING

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வெப் இணையத்தளம் ஓராண்டினை நிறைவு செய்து தனது இணைண்டாம் ஆண்டில் காலடி பதிக்கின்றது. ஆரம்பத்தில் ஒன்றியத்தின் செயற்பாடுகளில் ஒன்றாகவும் அங்கத்தவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான தொடர்பாடலுக்கான முக்கிய ஊடகமாகப் பாவிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்ட தளம் நாளடைவில் இளையதலைமுறையினரின் திறமைகளை அடையாளம் கண்டு அவர்களைக் கொண்டே youth club எனும் இணைப்பு நிர்வகிக்கப்படுகின்றது. இவ் வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியை வேண்டி நிற்கும் ஒன்றியம் இவ் இணையத்தளத்தை சிறப்புடனும் ஒழுங்கான நிர்வகிப்பை மேற்கொள்வதையும் இவ்வருடத்திற்கான வேலைத்திட்டமாக தீர்மானம் எடுத்துள்ளது.




# நிகழ்ச்சிகள் 2006

நடப்பாண்டுக்கான கலை கலாச்சார வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிகழ்ச்சிநிரல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. நடக்க இருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் முறையாக ஒருங்கமைக்கப்பட்டு நிர்வாகசபை உறுப்பினர் ஒருவரின் நேரடி வழிநடத்தலில் நிறைவேற்றுவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறித்த நிகழ்ச்சிகளின் விபரங்கள் கீழ்வருமாறு

- ஒன்றிய ஆண்டு விழா
- ஒன்றிய விளையாட்டுப்போட்டி
- சுற்றுலாவுடன் இணைந்த கோடை விடுமுறைக் களியாட்டம்
- சரஸ்வதி பூசை
- தீபாவளி
- கரப்பந்தாட்டம்
- சிறுவர் உதைபந்தாட்டம்
- நத்தார் விழா

இந்நிகழ்வுகளுக்கான காலமும் இடங்களும் பின்னர் அறியத்தரப்படும்.

# யாப்பு 2006

கடந்த நிர்வாகத்தால் முன்னெடுக்கப்பட்ட யாப்பு சீர்திருத்தம் சில அகநிலை முரண்பாடுகளால் தடைப்பட்ட நிலையில் எமது புதிய நிர்வாகம் தொடரவேண்டிய கட்டாயத்திற்குள்ளானது.இவ் வகையில் யாப்பானது நிர்வாகசபையினது பரிசீலனைக்குள்ளானது.யாப்புக்குழு சமர்ப்பித்த யாப்பில் சில திருத்தங்களும் மேற் கொள்ளப்பட்டது.இத் திருத்தப்பட்ட யாப்பு மீள் பரிசோதனைக்காகவும் ஆலோசனைகளுக்காகவும் மீண்டும் அங்கத்தவர்களுக்கு கிடைக்க வழி செய்யப்பட்டு இத்திருத்தப்பட்ட யாப்பின் ஆலோசனைக் காலக்கெடுவாக 15.03.06 உம் யாப்பு நிறைவேற்று தினமாக 19.03.06 உம் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.சில தவிர்க்க முடியாத காரணங்களினால் திகதி பிற்போடப்பட்டு 26.03.06 இல் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு வாதப்பிரதிவாதங்களின் பின்னர் நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்ட யாப்பின் நகலானது இறுதி வடிவமைக்கப்பட்டு அங்கத்தவர்களனைவருக்கும் கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது.